# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.3910/C/2023

திரு D. ஸ்டான்லி -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / ஆராய்ச்சி அலுவலர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வனத்துறை தலைமையிடம்,
வேளச்சேரி முதன்மை சாலை,
கிண்டி, சென்னை - 600 032. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 03.10.2022 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 10.11.2022 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 28.02.2023 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு D. ஸ்டான்லி என்பவர் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி மா. சுமதி, ஆராய்ச்சி அலுவலர், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) அலுவலகம், வனத்துறை தலைமையிடம், கிண்டி, சென்னை என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, தலைமைச் செயலகம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் வனத்துறை அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தனக்கு காலதாமதமாக வழங்கப்பட்ட DCRG மற்றும் GPF F/W தொகைகளுக்கு காலதாமத கால வட்டி கணக்கிட்டு தொகையை வழங்க முன் அனுமதி கோரி சென்னை, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) அலுவலகம் மூலமாக அரசுக்கு அனுப்பிய கருத்துரு கடிதம் ந.க.எண்.ஓய்வூதியம் 2/6026/2016 நாள் 13.01.2020-ன்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.RTI/30583/2022 நாள் 23.12.2023 மற்றும் ந.க.எண்.ஆர்டிஐ/3639/2025 நாள்25.02.2025 ஆகிய தேதிகளிட்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும், மனுதாரர் 30.03.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தனது மனுவில் தனக்கு காலதாமதமாக வழங்கப்பட்ட DCRG மற்றும் GPF F/W தொகைகளுக்கான வட்டித் தொகையை, வனத்துறை நிர்வாகம் வழங்கிட, தமிழ்நாடு அரசால் அரசாணை (D) எண்.289 நாள் 02.12.2025-ல் வெளியிடப்பட்டு தற்போது நடவடிக்கையில் இருந்து வருவதால் தனது வழக்கினை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். ஆணையம் அதனை பதிவு செய்து, மனுதாரர் கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.3910/C/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / ஆராய்ச்சி அலுவலர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வனத்துறை தலைமையிடம்,
வேளச்சேரி முதன்மை சாலை,
கிண்டி, சென்னை - 600 032.

**<u>வழக்கு எண்.SA.3910/C/2023</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு D. ஸ்டான்லி,
எண்.3, சாணக்கியபுரி நகர்,
பூக்கொல்லை, N.K. நகர்,
P & T காலனி அஞ்சல்,
தஞ்சாவூர் - 613 006.

Copy to: File
SNPS / 15.04.2026